# ஆவிக்குரிய யுத்தம்

Sermon Transcription March 2019



ETERNAL LIGHT AG
let your light shine

Ps. ஆஸ்வின் ஜேம்ஸ்டட்

# ஆவிக்குரிய யுத்தம்

Ps. ஆஸ்வின் ஜேம்ஸ்டட்

# முகவுரை

இந்த புத்தகத்தில் அச்சிடப்பட்டுள்ள செய்திகள் நம்முடைய போதகர் ஆஸ்வின் ஜேம்ஸ்டட்டால் நம் சபையில் புதன் கிழமை மற்றும் சனிக்கிழமை இரவு நடைபெறும் வேதாகம பயிற்சி வகுப்பில் பிரசங்கிக்கப்பட்ட வார்த்தைகள்.

நாங்கள் இந்த புத்தகத்தை மிகுந்த ஜெபத்தோடும் பிரயாசத்தோடும் உங்கள் ஆவிக்குரிய அதிகாரத்தையும், வல்லமையையும் அறிந்து கொண்டு, இருள் நிறைந்த இந்த உலகத்தை வென்று தேவனால் உங்களுக்கான தேவ சித்தத்தை அடைய உருவாக்கியுள்ளோம்.

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | கர்த்தர் - அனைத்து ஆவிகளின் தலையானவர் | 1 |
| 2 | நமது வாழ்வில் ஆண்டவரைக் கொண்டாட வேண்டும் | 9 |
| 3 | விசுவாசத்தில் தேவனோடு நடத்தல் | 13 |
| 4 | ஆவிக்குரிய இரகசியங்களை பெற்றுக்கொள்ளுதல் | 17 |
| 5 | தேவனுடைய சிட்சை கடினமானதா? | 20 |
| 6 | நீ மேலே போ, அவர்களை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் | 25 |
| 7 | உங்கள் ஆயுதத்தை இராஜாக்களுக்கு எதிராக ஆயத்தப்படுத்துங்கள் | 29 |

## 1.கர்த்தர் - அனைத்து ஆவிகளின் தலையானவர்

தேவனுடைய ஆவி உங்களோடு இணையும்போது உங்களுக்குத் தெரியாமல் உங்களுக்குள் ஏதோ ஒன்று சம்பவிக்கிறது. நீங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறீர்கள். மற்ற தெய்வங்களின் ஆவிகள் இணையும் போது, வேறு ஏதோ சம்பவிக்கிறது. எப்படி அதை உணர்கிறீர்கள்? பயம், கவலை, கோபம். புரிகிறதா உங்களுக்கு?

ஆனால் பரிசுத்த ஆவி உங்களோடு இணையும் போது, உங்களுக்குள் சமாதானம், சந்தோசம், அன்பு நிரம்புகிறது. மற்ற ஆவி உங்களோடு இணையும்போது, உங்களுக்கு இச்சை வருகிறது. தேவன் உங்களோடு இணையும்போது அன்பாக நேசிக்கப்படுகிறீர்கள்.

உங்கள் மேலே உரைக்கப்பட்ட ஒவ்வொரு தீர்க்கதரிசன வார்த்தையையும் நம்புங்கள், அதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பிசாசு அந்த வார்த்தையை நம் ஆத்துமாவில் இருந்து எடுத்து விடக்கூடாது. உங்கள் ஜெபத்திலே அதை நீங்கள் அறிக்கையிடுங்கள். பவுல் தீமோத்தேயுவிற்கு இப்படி எழுதுகிறார், "நாங்கள் உன் மேல் கை வைத்து ஜெபித்த போது உன்மேல் பேசப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தைகள், உனக்குப் பலிக்கும்". உங்கள் மீது பேசப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தைகள் நம்புவதற்கு கடினமானதாக இருந்தாலும் அதை நீங்கள் நம்புங்கள். சில மாதங்களுக்கு, சில வருஷங்களுக்கு முன்பாக உங்கள் மீது பேசப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தைகளை திரும்பவும் நம்புங்கள்.

நான் ஊழியத்திற்கு வருவதற்கு முன்பே தீர்கதரிசி மூலமாய் தேவன் என்னிடம் என்ன பேசினார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். மூன்று நபர்கள் வெவ்வேறு சூழ்நிலையிலே என் மேல் தீர்க்கதரிசனம் சொன்னார்கள். நான் ஒருமுறை சிறுவர் பாடசாலை நடத்திக் கொண்டிருந்த நண்பனை சந்திக்கப்போனேன். அங்கே அவர் ஒரு தேவமனிதனோடு இணைந்து ஜெபித்துக் கொண்டிருந்தார். அந்த தேவமனிதர் என்மேல் கைவைத்துச் சொன்னார்,"தேவன் உன்னை ஊழியத்திற்கு அழைக்கிறார். உன்னை போதகராக அழைக்கிறார்", என்று பலகாரியங்களை தீர்க்கதரிசனமாகச் சொன்னார். அந்த நாட்களிலே ஒரு போதகராவதற்கு எனக்கு விருப்பமில்லாமலிருந்தது. நான் இரட்சிக்கப்பட்டு இருந்தேன், ஆனாலும் போதகராவதில் எனக்கு விருப்பமில்லை.

இன்னொரு சூழ்நிலையிலே ஒரு க்ரூடுசேடுக்கு (Crusade) உதவி செய்து கொண்டு இருந்தேன். அங்கே நிறைய பேர் நின்று

கொண்டிருந்தார்கள். ஒரு ஸ்திரீ கடந்து வந்தார்கள். இருட்டாக இருந்தது என் முகத்தைக் கூடப்பார்க்க முடியவில்லை. அவர் என்னை பார்த்து சொன்னார்கள்,உன்னை தேவன் ஊழியத்திற்கு அழைக்கிறார், என்று சொன்னார்கள்.

ஒரு சமயம் ஒரு இளைஞர் முகாமிலே நான் ட்ரம்ஸ் அடித்துக் கொண்டிருந்தேன். அப்போது அந்த ஊழியக்காரர் அங்கே இருக்கிற எல்லாரையும் விட்டுவிட்டு என்னிடம் வந்து,"நீ ஒரு போதகராகப் போகிறாய்", என்று சொன்னார். இந்த மாதிரி தீர்க்கதரிசனங்களை கேட்காமல் நான் ஓடிக் கொண்டிருந்தேன். ஆனால் தேவன் நான் எங்கே இருக்க வேண்டுமோ அங்கே என்னை கொண்டு வந்தார்.

உங்கள் மேல் பேசப்பட்ட எந்த தீர்க்கதரிசன வார்த்தையும் வீணாய்ப் போகாது. சூழ்நிலைகள் மாறலாம். உங்கள் சரீரப் பிரகாரமான, மனரீதியான சூழ்நிலைகள் மாறலாம். ஆனால் உங்கள் மேல் பேசப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தை, உங்களுக்கு கொடுக்கப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தை, அது உங்கள் சரீரத்திலே கொடுக்கப்படவில்லை. அது உங்கள் மனதிலோ ஆத்துமாவிலோ கொடுக்கப்படவில்லை. அது உங்கள் ஆவியிலே இருக்கிறது. அந்த ஆவி அழியாதது. அது நித்திய நித்தியமானது.

நம் பிறப்பு முதல் இறப்பு வரை தேவனால் முத்தரிக்கப் பட்டிருக்கிறது. விதைகள் கடினமானதாக இருந்தாலும் பல மாதங்கள் கழிந்திருந்தாலும்.சரியான நொடியிலே, சரியான சூழ்நிலையிலே, அந்த வித்தானது முளைக்கும். எதற்காக இதை சொல்லுகிறேன்? இது தான் சரியான சூழ்நிலை. நீங்க இந்த விதையோடு இணைக்கப் பட்டிருக்கிறீர்கள். இந்த பலிபீடத்தோடு இணைக்கப் பட்டிருக்கிறீர்கள்.

தேவனுடைய பிள்ளையாக நீங்கள் இயங்கும்போது உங்கள் ஆவிக்குள் என்ன இருக்கிறதோ, அது முளைத்து வெளியே வரும். அது “பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, தேவனுடைய ஆவியினாலே ஆகும்”.

உங்களுடைய கனவுகளை பார்க்கக் கூடிய பலம் உங்களுக்கு இல்லாமலிருக்கலாம். அது ஆவியினாலே ஆகும். நம்முடைய சத்துரு யார்? பிரச்சனை உண்டாக்கும் மனிதர்கள் நம்மை விட்டுப் போனாலும் பிரச்சனை அங்கேதான் இருக்கும். நமக்கு சத்துரு மனிதர்கள் அல்ல. ஏனென்றால் நம்முடைய சத்துரு ஒரு ஆவி. நீங்களும் நானும் ஒரு ஆவி. நான் ஒரு

சரீரம் அல்ல; நான் ஒரு ஆத்துமா அல்ல; நான் ஒரு ஆவி. ஆத்துமாவோடு சரீரத்தில் வாழ்கிறேன்.

**2 இராஜாக்கள் 1:1.**

இங்கு ஒரு சூழ்நிலை; இஸ்ரவேலின் இராஜா கீழே விழுந்து வியாதிப்பட்டுப் கிடக்கிறார். அவன் தேவனுடைய ஜனங்களின் இராஜாவாக இருந்தும் அவனுடைய தேவனைப் பற்றி அவன் அறிந்திருக்கவில்லை. அவன் கீழே விழுந்த உடனே, தன்னுடைய தூதர்களை எக்ரோன் தேசத்து தேவனிடத்தில் விசாரிக்க அனுப்புகிறான். ஆகையால் யெகோவா தேவன் தன்னுடைய தூதனை எலியா தீர்க்கதரிசியிடம் அனுப்புகிறார். அவர் என்ன சொன்னார் என்பது ரொம்ப முக்கியம்.

**2 இராஜாக்கள் 1:3**, "இஸ்ரவேலிலே தேவன் இல்லையென்றா நீங்கள் எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூபிடத்தில் விசாரிக்கப் போனீர்கள்?" என்று கர்த்தர் கேட்கிறார். அங்கேயும் ஒரு தேவன் இங்கேயும் ஒரு தேவன். இது அப்படித்தான் தோன்றுகிறது. இங்கு தேவன் இல்லை என்று நீங்கள் நினைக்கிறீர்களா? நீங்கள் அங்கே வேறே தேவனிடம் கேட்கப் போகிறீகள். அது பிசாசு என்று தெரியும். அது ஒரு ஆவி. நம்முடைய தேவனும் ஆவியாயிருக்கிறார். அந்த தேவனும் ஒரு ஆவி, ஆனால் அசுத்த ஆவி. வேதம் சொல்லுகிறது தேவர்களும் தேவதைகளும் இருக்கிறார்கள்.

**கர்த்தர் யார்?**

அநேக ஆவிகள் இந்த உலகத்திலே இருக்கிறது. தேவனும் ஒரு ஆவியாயிருக்கிறார். நாம் ஒரு ஆவியோடு இணையாமல் நம்மால் இயங்க முடியாது, எதோ ஒரு ஆவியோடு நாம் இணைய வேண்டும். ஜனங்கள் எந்த ஆவிகளெல்லாம் அவர்கள் வழியில் வந்ததோ அவைகளோடு வேறே வேறே பேரிலே அழைத்து இணைந்தார்கள். அந்த ஆவிகள் வெளிப்பட்டு அவர்கள் மேல் தீர்க்கதரிசனம் உரைத்தது. ஜனங்கள் அவைகள் நல்ல ஆவிகள் என்று நினைத்துப் பின்பற்றினார்கள்.

நாம் ஒரு ஆவியைப் பின்பற்றுகிறோம், அதை கர்த்தர் என்று அழைக்கிறோம். எப்படி அவர் கர்த்தராக மாறினார்? இயேசு கிறிஸ்து இந்த உலகத்திலே வந்தபோது, அவர் தேவன் என்றும், போதகர் என்றும் தேவனுடைய குமாரன் என்றும் அழைக்கப்பட்டார். அவர் மரித்து உயிரோடே எழுந்தபின்பு, வேதம் அவரை கர்த்தர் என்று சொல்லுகிறது. சிலுவையிலே அவர் நம் எல்லாருடைய பாவத்தையும் சுமந்து

பாவமாக்கப்பட்டார். இந்த உலகத்திலே மிக மோசமாக பாவத்திலே மரித்தவர் இயேசு மட்டும்தான். ஆதனால்தான் பிசாசுக்கு இவரை பாதாளத்திற்கு இழுத்துச் செல்லும் அதிகாரம் கிடைத்தது. ஏனென்றால் இயேசுவின் ஆத்துமா மேலே சாத்தானுக்கு அதிகாரம் வந்தது. நீங்களும் நானும் மரிக்காமல் இருப்பதற்காக இயேசுகிறிஸ்து மரணத்தை ருசி பார்த்தார்.

எபேசியர் 1ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறபடி கீழே விழத்தள்ளப்பட்ட எல்லா இருளின் ஆவிகளும், அசுத்த ஆவிகளும் அந்த மூன்று நாட்களும் எருசலேமிலே கூடி வந்து இயேசுவின் கல்லறையைக் காவல் பண்ணினது. ஆனால் தேவனுடைய வல்லமை இறங்கினபோது எல்லா ஆவிகளுடைய வல்லமையும், சங்கிலிகளும் உடைக்கப்பட்டு, இயேசுவை உயிரோடு எழுப்பினார். அப்போது இயேசுவுக்கு கர்த்தர் என்ற நாமம் கிடைத்தது. இயேசுவே எல்லா ஆவிகளின் கர்த்தர்.

அநேக ஜனங்கள் அநேக ஆவிகளைப் பின்பற்றுகிறார்கள். நாய்களுக்கு கடிப்பதற்கும் குரைப்பதற்கும் வல்லமை இருக்கிறது போல அந்த ஆவிகளுக்கும் சில வல்லமை இருக்கிறது. ஜனங்கள் அதைப் பின்பற்றுகிறார்கள். அதற்கு ஒரு பலிபீடம் கட்டுகிறார்கள். நாம் பலிபீடம் என்று சொல்லும் போது அது புகைப்படமாக இருக்கலாம், சிலையாக இருக்கலாம், அவர்கள் இரத்தம் சிந்தி பலி செலுத்துகிற இடமாகவும் இருக்கலாம். அந்த ஆவி அவர்கள் மீது அதிகாரம் செலுத்துகிறது. அந்த ஆவி அவர்களுக்கு உதவி செய்வது போல் தோன்றுகிறது. அவர்களுக்கு ஒரு குழந்தையை கொடுக்கிறது. ஆனால் அந்த குழந்தை குறையோடு பிறக்கிறது, அல்லது ஒரு மோசமான குணங்களோடு வளருகிறது. அவர்களுக்கு ஏதோ ஒன்றைக் கொடுக்கிறது. ஆனால் நல்ல விசயங்களைக் கொடுப்பதில்லை.ஏனென்றால் அவைகள் அசுத்த ஆவிகள்.

ஜனங்கள் பலியுடன் உடன்படிக்கை செய்து அந்த ஆவியோடு இணைகிறார்கள். அதனால் அவர்களை அமுக்கி ஆளுகை செய்து அவர்களுடைய பெலத்தை அது உறிஞ்சுகிறது. இந்த உலகத்திலே பிறக்கிற எல்லா குழந்தையுமே தேவனுடைய பலத்தோடு, தேவ திட்டத்தோடு பிறக்கிறது. ஆனால் நாம் வளரும் போது அந்த ஆவிகள் என்ன செய்கிறது? அந்த பலத்தை எல்லாம் உறிஞ்சி ஒரு பிணமாக மாற்றுகிறது. ஆகையால் அவர்கள் பயன்படாதவர்களாகிறார்கள். அவர்கள் மரிக்கும் போது, அந்த பிசாசு வந்து அவர்கள் ஆத்துமாவை பாதாளத்திற்கு எடுத்துச் செல்கிறது.

உங்களுடைய ஆவி இயேசுவின் ஆவியோடு இணைவதைத்தான் இரட்சிப்பு என்று சொல்லுகிறோம். நீங்கள் சரீரப்படி பிறந்திருக்கிறீர்கள். நீங்கள் பிறக்கும்போது உங்கள் ஆவி தேவனோடு இணைந்திருக்கவில்லை. நீங்கள் இயேசுவை கர்த்தரென்று விசுவாசித்து, வாயினால் அறிக்கையிடும் போது இயேசுவின் ஆவி உங்கள் ஆவியோடு இணைகிறார். அதைத்தான் வேதம் ஆவியிலே உயிரடைகிறது என்று சொல்லுகிறது.

ஏதேன் தோட்டத்திலே ஆதாம் தேவனுடைய ஆவியோடு இணைந்திருந்தான். ஆனால் பாவம் செய்த போது, தேவனுடைய ஆவி அவனை விட்டு விலகி சென்றது; அவன் மரித்தான் என்று வேதம் சொல்லுகிறது. அந்த ஆதாம் தனிமைப்படுத்தப்பட்டபோது வேறே பல ஆவிகளும் அவனை மேற்கொள்ள ஆரம்பித்தது. இயேசு கிறிஸ்துவை இரண்டாம் ஆதாம் என்று சொல்லுகிறோம். முதலாவது ஆதாம் மூலம் நாம் இழந்ததை இரண்டாம் ஆதாம் மூலம் நாம் பெற்றுக்கொள்கிறோம். இயேசுவை ஏற்றுக் கொள்ளும் போது ஆதாம் தொலைத்துப்போட்டதை நாம் பெற்றுக் கொள்கிறோம்.

இப்போதும் நீங்கள் உங்கள் சொந்த பெலத்தினாலே இயங்காமல் பரிசுத்தஆவியாகிய இயேசுவின் ஆவியோடு இயங்குகிறீர்கள். கிறிஸ்தவர்கள் இதை வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும் தெரிந்து கொள்ள வேண்டும். தேவனுடைய ஆவி உங்கள் மேலிருக்கிறார். உங்கள் மனதினால் யோசிக்கிறீர்கள், இருதயத்தினால் உணருகிறீர்கள்,ஆவியிலே வாழுகிறீர்கள். உங்கள் ஆவியிலே என்ன இருக்கிறதோ அப்படியாக மாறுகிறீர்கள்.

உங்கள் ஆவியிலே என்ன திட்டம்,தேவ சித்தம் குறிக்கப்பட்டிருக்கிறதோ அது சம்பவிக்கும். உலகில் இருக்கிற எல்லாருக்குமே ஆவியிலே தேவ சித்தம் இருக்கிறது. சரியான சூழ்நிலையோடு அவர்கள் இணையவில்லை. ஆனால் தேவனுடைய கிருபையினாலே நீங்கள் இதைக் கேட்கிறீர்கள், சரியான சூழ்நிலையிலே நீங்கள் இணைந்து வளர்கிறீர்கள். உங்கள் ஆவியிலே என்ன தேவ சித்தம் இருக்கிறதோ அது சம்பவிக்கும்.

தண்ணீரின் அருகிலே நடப்பட்ட மரம் போலிருக்கிறீர்கள். நீங்கள் வளருவீர்கள். இதுவரை வறண்டுபோய் அங்குமிங்கும் நீங்கள் அலைந்திருக்கலாம். இப்போதோ நீங்கள் ஜீவத்தண்ணீருள்ள ஊற்றண்டையிலே வந்திருக்கிறீர்கள். இப்போதுதான் சரியான நேரம், சரியான சந்தர்ப்பம். என்னுடைய ஆவியிலே தோன்றுகிறது. நான் மறுபடி

சொல்லுகிறேன் யாராவது குழந்தையில்லாமல் இருக்கிறீர்களா? நீங்கள் குழந்தைக்காக ஜெபிக்கிறீர்களா? அல்லது இரண்டாவது குழந்தைக்காக ஜெபிக்கிறீர்களா? தேவன் சொல்லுகிறார்,"இது உங்களுடைய நேரம்", நீங்கள் இந்த தீர்க்கதரிசன வார்த்தையை நம்பி, இதனோடு இணைந்திருந்தால் பெற்றுக் கொள்வீர்கள்.

மனிதன் செய்யக்கூடிய சில காரியங்கள் இருக்கிறது. ஆனால் சில விசயங்களை தேவன் மட்டுமே செய்ய முடியும். மருத்துவர்கள் செய்யக்கூடிய காரியங்களுக்கு ஒரு எல்லை இருக்கிறது. ஆனால் இந்த உலகத்திலே மனிதனால் செய்யக்கூடாத பல காரியங்கள் இருக்கிறது. உங்கள் நேரத்திற்கு முன்பு நீங்கள் மரிக்க மாட்டீர்கள். நீங்கள் தேவனுடைய ஆலயம். பரிசுத்த ஆவி உங்களுக்குள்ளே வாசம் பண்ணுகிறார். நீங்கள் தேவனுடைய பாத்திரம். தேவன் உங்களுக்குள் வாசம் பண்ணுகிறார். உங்கள் பாத்திரத்தை பரிசுத்தமாக வையுங்கள். அப்போது தேவன் உங்களுக்குள் வாசம் பண்ணி உங்கள் மூலமாக இயங்க முடியும்.

2தீமோத்தேயு 2ம் அதிகாரம் யாராவது இந்த தீர்க்கதரிசன வார்த்தை உங்களுக்குரியது என்று நினைத்தால், உங்கள் மேலே ஒரு பெரிய அழைப்பு இருக்கிறது. இந்த தீர்க்கதரிசன வார்த்தையோடு இணைகிற யாவருடைய வாழ்க்கையும் மாறும். தேவனுடைய கனமுள்ள பாத்திரமாக நீங்கள் மாறுவீர்கள். நீங்கள் உங்களை பரிசுத்தமாக்கினால், நம்முடைய பாத்திரத்தை தேவனுடைய ஆவி வாசம்பண்ணுவதற்கு தகுதியாக வைத்தால், நீங்கள் ஒரு விசேஷித்தவர். நீங்கள் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள். தேவனுடைய ஊழியத்திற்கு பயன்படுகிறவர்கள்.

தன்னுடைய அழைப்பிலே கவனமாயிருக்கிறவன் இராஜாக்களுக்கு முன்பாக நிற்பான். தேவன் உங்களை உபயோகப்படுத்துவார். நீங்கள் தேவனுடைய கருவியாயிருக்கிறீர்கள். தேவனுடைய பெரிய திட்டத்திற்காக ராஜாவின் மேஜையில் உள்ள பொற்பாத்திரம் போல் மின்னுவீர்கள். அது எல்லா நாளும் சுத்திகரிக்கப்படும். மற்ற பாத்திரங்களோடு அதை கழுவ வைக மற்ற பாத்திரங்களோடு கழுவுமிடத்தில் அதை வைக்க மாட்டார்கள்.

நீங்கள் தகுதியுள்ளவர்கள். உங்கள் அழைப்பை நான் தெரிவிக்கிறேன். உங்கனுக்கான தேவதிட்டத்தைக் காண்பிக்கிறேன். நீங்கள் பாவம் செய்தால் மரிப்பீர்கள் என்று நான் சொல்லவில்லை. நீங்கள் தகுதியாக வாழ்ந்தால் உயருவீர்கள். உங்களுக்கு என்ன

வேண்டுமென்று நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் உயர அழைக்கப்பட்டீர்கள். மேலே பறக்க அழைக்கப் பட்டீர்கள். சிலர் கீழே பறந்து கொண்டிருக்கிறீர்கள். நீங்களோ தேவனுடைய பாத்திரம்.

ஏனென்றால் சிறந்த நோக்கத்திற்காக நீங்கள் அழைக்கப் பட்டிருக்கிறீர்கள். நீங்கள் உயர அழைக்கப் பட்டிருக்கிறீர்கள். உங்களைச் சுற்றிலும் இருப்பது உங்களுடைய உயரத்திற்கு வர முடியாது. அது உங்கள் ஆவியிலே இருக்கிறது. உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்? எங்கே போக வேண்டும் என்று தெரியும், ஆனால் செய்ய முடியவில்லை. ஆனால் இன்று தேவனுடைய ஆவி உங்கள் மனதிலே பெலனையும், அதற்கான திட்டத்தையும் கொடுக்கிறார்.

இருளில் இருக்கிற ஜனங்களை விடுவிப்பது நற்கிரியை. சில சபைகளுக்கும் சில ஸ்தாபனங்களுக்கும் ஆவிக்குரிய தரிசனம் இல்லாததினாலே நற்கிரியைகளிலே மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். சத்துருவினுடைய கட்டிலிருந்து ஜனங்களை விடுவிப்பதுதான் நற்கிரியை. ஏழைகளைப் போஷிக்க இயேசு இங்கே வரவில்லை. பழைய ஏற்பாட்டிலே ஏழைகளுக்கு உதவ வேண்டுமென்று நியமனம் இருக்கிறது. இயேசு வந்தது இருளில் இருக்கிற ஜனங்கள் வெளிச்சத்தைக் காண்பதற்காக. ஆகையால் ஜனங்கள் தேவனுடைய ஆவியோடு இணைவார்கள்.

அந்த செய்தியை ராஜாவிடம் அந்த தூதன் சொன்ன போது, எலியாவை அழைத்துவர ஐம்பது பேரையும் ஒரு படைத்தலைவனையும் அனுப்பினான்அவர்கள் எலியா மலையின் மேல் இருப்பதை கண்டார்கள். அப்பொழுது படைத்தலைவன் “தேவனுடைய மனுஷனே இறங்கி வா! ராஜா உன்னை வரச்சொல்கிறார்”, என்றான். அதற்கு எலியா படைத் தலைவனை நோக்கி அக்கினி வானத்திலிருந்து இறங்கி உன்னையும் உன் ஐம்பது பேரையும் பட்சிக்கக் கடவது என்றான். அப்போது அக்கினி வானத்திலிருந்து இறங்கி அவனையும் அந்த ஐம்பது பேரையும் பட்சித்தது. இந்த படைத்தலைவன் அநேக தேவனுடைய மனிதர்களை பார்த்திருக்கிறார். ஆனால் கர்த்தருடைய மனிதரைப் பார்க்கவில்லை. இந்த உலகம் அநேக தேவனுடைய மனிதர்களைப் பார்த்திருக்கலாம். ஆனால் கர்த்தருடைய மனிதர்களையோ பார்க்கவில்லை.

ஏற்கனவே வல்லமையை உபயோகம் செய்துவிட்டார், இபபோது வல்லமை குறைவாயிருக்குமென்று இரண்டாவதுமுறை 51 பேரை அனுப்புகிறான். மீண்டும் அந்தப்புதிய படைத்தலைவன்

சொல்லுகிறான்,"தேவனுடைய மனிதனே ராஜா உன்னை சீக்கிரமாய் வரச் சொல்கிறார்", என்றான். ஐம்பது பேரின் தலைவனை நோக்கி அக்கினி வானத்திலிருந்து இறங்கி உன்னையும் உன் 50 பேரையும் பட்சிக்க கடவது என்றான். உடனே அக்கினி இறங்கி பட்சித்தது.

மீண்டும் 50 பேரை அனுப்புகிறார். இவர் ஞானமுள்ளவர். இவர் போய் முழங்கால் படியிட்டு தேவனுடைய மனிதனிடம், "என்மேலும் என்னோடு இருக்கிற 50 பேர் மேலும் இரக்கமாயிரும்", என்று விண்ணப்பம் செய்தார். "நீர் என்னோடு கூட வராவிட்டால் ராஜா என்னைக் கொன்று போடுவார். உம்மை கூப்பிட்டால் நீர் கொன்று போடுவீர்",என்று பரிதாபமாய் கெஞ்சினார். நீங்கள் அந்தப் படைத்தலைவனைப் போல பரிதாபத்திலே வாழுகிறவர்கள் அல்ல. எலியாவைப்போன்று வல்லமையிலும், அற்புதங்களிலும் வாழுகிறவர்கள்.

நீங்கள் பரிசுத்த ஆவியினுடைய வல்லமையினால் அபிஷேகத்தினால் வாழுகிறீர்கள். பானுபிரகாஷ் பிரதர் என்னிடம் வந்து "பாஸ்டர் எனக்கு வேலை போய் விட்டது" என்று சொன்னார். நான் உடனே எதையுமே யோசிக்காமல் வாழ்த்துக்கள் சகோதரரே என்றேன். பிறகு அவர் கண்களைப் பார்த்துச் சொன்னேன், "உங்களுக்காக ஜெபிக்கிறேன்",என்று. மற்றவர்களுடைய பரிதாபத்திலே வாழ்கிறவர்கள் அல்ல நாம். நீங்கள் பலத்தினால் ஜெயம் எடுக்கும்படி அழைக்கப் பட்டிருக்கிறீர்கள். அடுத்த வாரமே அவருக்கு ஒரு நேர்முகத்தேர்வு வந்தது. 50 சதவீதம் அதிகமான சம்பளத்தில் புதிய வேலை கிடைத்தது.

நீங்கள் பலத்தினால் ஜெயம் எடுக்கிற நேரம். உங்கள் ஆவியிலே என்ன இருக்கிறதோ உங்கள் கனவிலே என்ன இருக்கிறதோ பிள்ளைக்கான கனவுகள் அதெல்லாம் இப்போது சம்பவிக்கப் போகிறது. தாவிதுடைய சகோதரரைப் போல உங்கள் சகோதரரும் உங்களைத் திட்டலாம். யோசேப்பினுடைய சகோதரர் போல உங்களை அவர்கள் பகைக்கலாம். தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவின் நண்பர்கள் போல எல்லா நண்பர்களும் உங்களை விட்டுவிட்டுப் போய் விடலாம். ஆனாலும் உங்கள் ஆவியிலே என்ன இருக்கிறதோ, உங்கள் ஆவியிலே என்ன குறிக்கப் பட்டிருக்கிறதோ, அழியாததும் நித்தியமுமான அந்த திட்டம், அது நிறைவேறும்.

ராஜாக்கள் உங்களைத் தேடி வருவார்கள். தேசங்கள் உங்களை அழைக்கும். ஏனென்றால் நீங்கள் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள். நீங்கள் தேவனுடைய பிள்ளைகள். ஆமென்.

## 2. நமது வாழ்வில் ஆண்டவரைக் கொண்டாட வேண்டும்

உங்கள் வாழ்க்கையிலே ஆண்டவர் கொடுத்த வெற்றியை நீங்கள் கொண்டாட வேண்டும். சபைக்கு வரும் போது நீங்கள் மகிழ்ச்சியாக வரவேண்டும். உங்கள் பிரச்சனைகளை வீட்டோடு விட்டுவிட வேண்டும். வீட்டிலிருந்து வரும் போது முழங்கால் படியிட்டு ஜெபிக்க வேண்டும். ஞாயிற்றுக்கிழமை கொண்டாட வர வேண்டும். கொண்டாடுவது என்பது கர்த்தர் செய்த நன்மைகளுக்காக அவரை துதிப்பது, ஆராதிப்பது, நன்றி செலுத்துவது.

உங்கள் பிரச்சனைகள் மாறப்போகிறது. உங்கள் மேல் உள்ள தீர்க்கதரிசனம் நிறைவேறப் போகிறது. ஜெபம், மகிழ்ச்சியைக் கொண்டு வரும். விசுவாசம் வெற்றியைக் கொண்டு வரும். “உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்” என வேதம் சொல்லுகிறது. விசுவாசத்தின் விளைவு மகிழச்சி. என் தேவன் என்னோடிருக்கிறார், எனக்கு ஜெயத்தைக் கொடுப்பார், என் பிரச்சனையைத் தீர்ப்பார் என்பதுதான் விசுவாசம்.

**அறிக்கை:**

*என் பிரச்சனையை வீட்டோடு விட்டுவிடுவேன்.*

சூழ்நிலைகள் மாறாக இருக்கலாம், பிரச்சனைகள் பல இருக்கலாம். ஆனால் கர்த்தர் உங்களை மாற்றுவார். தாவீது ஒரு சிறுவன். அவனுடைய அண்ணன்களெல்லாம் பலசாலிகளாக இருப்பதனால், இராஜா அவர்களை இராணுவத்திற்கு எடுத்துக்கொண்டார்.

தாவீதுக்குள் ஒருமாற்றம் நடந்தது. உங்களுக்குள்ளும் மாற்றம் நடக்கும். இது ஆவியின் பரிமாறுதல். தாவீதுக்குள் இது தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. அவர் ஆடு மேய்க்கும் போது எப்போதும் தேவனைத்

துதித்துக் கொண்டிருந்தார். அவர் தேவனை அறிந்திருந்தார். தேவனைப் பற்றிய வெளிப்பாடு இருந்தது. சங்கீதங்களில் அநேகம் தாவீது வனாந்தரத்தில் இருந்த போது எழுதினது. அவர் கொண்டாட காரணமில்லாதிருந்தும், கொண்டாடுவதற்கு அவரிடம் விசுவாசம் இருந்தது. அவர் தன் தேவனை அறிந்திருந்தார். தங்கள் தேவனை அறிந்த ஜனங்கள் பெலனடைவார்கள். அவர்கள் பலத்த காரியத்தை செய்வார்கள். அவர்கள் பராக்கிரமஞ் செய்வார்கள். தேவனை அறிந்த ஜனம் பராக்கிரமஞ் செய்யும். பிசாசு சிங்கத்தைப் போலவும், கரடியைப் போலவும் வரும்போது, அவன் பயப்படவில்லை. அவனுக்குள் ஏதோ இருந்தது.

நீங்கள் ஆவிக்குரிய ஞானத்தில் இயங்குகிறவர்கள். காணாதவைகளை காண்பதைப் போல விசுவாசத்தில் அறிக்கையிடுகிறோம். நீங்கள் சாம்பலில் இருந்து எழுந்திருப்பீர்கள். நீங்கள் உயருவீர்கள். சாத்தான் உங்களைத் தாக்கவரும் போது, இது என்னுடையது நீ உள்ளே வரமுடியாது என்பீர்கள். நீங்கள் திரும்பி மலையைப் பார்த்து பேசுகிற நேரம். நீங்கள் பிரச்சனைகளைப் பார்த்து பேசுங்கள். நீங்கள் மகிழ்ச்சியில் இயங்குகிறவர்கள். ஏனெனில் உங்கள் தேவனை உங்களுக்குத் தெரியும். நீங்கள் பார்ப்பதெல்லாம் மாயை. ஆனால் உங்களுக்குள் இருப்பதுதான் உண்மை.

உங்கள் ஆவியிலே ஏதோ கொடுக்கப்பட்டிருக்கிறது. நாளைக்கு மிக மோசமான சூழ்நிலை வரும் போது அதை பார்த்து பேசப் போகிறீர்கள். நீங்கள் தரிசித்து நடப்பவர்கள் அல்ல. நீங்கள் விசுவாசித்து நடப்பவர்கள். நீங்கள் பறக்க அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் இயேசுவின் ஆவியோடு இணைக்கப்பட்டிருக்கிறீர்கள். உங்களுக்கும் மற்றவருக்கும் உள்ள வித்தியாசம் எல்லா ஆவிகளுக்கும் மேலான ஆவியாகிய கர்த்தரின் ஆவியோடு இணைக்கப்பட்டிருப்பதுதான்.

நீங்கள் எதை நம்புகிறீர்கள்? சிலர் குதிரைகளை நம்புவார்கள். சிலர் கைகளில் கட்டும் கயிற்றை நம்புவார்கள். ஆனால் நாமோ, எல்லா ஆவிகளின் கர்த்தரை நம்புகிறோம். இந்த பலிபீடத்தோடு நீங்கள் இணைந்திருப்பது, தேவன் உங்களுக்காக வைத்த திட்டத்தை எதிர்நோக்குவதற்காக. நாம் எப்போதும் கீழானவைகளை பார்க்கிறோம். உங்கள் பாதுகாப்பு தேவனிடமுள்ளது.

**அறிக்கை:**

*என் காலத்திற்கு முன்பாக நான் மரிப்பதில்லை. நான் செய்வதை செய்து முடிக்கும் வரை நான் இங்குதான் இருப்பேன்.*

இந்த பலிபீடத்தோடு நீங்கள் இணைந்திருக்கிறீர்கள். எல்லா ஆவிகளின் கர்த்தரை நீங்கள் ஆராதிக்கிறீர்கள். மெய்யாகவே, மெய்யாகவே "நீர் என் தேவன்", என சொல்லுகிறோம். எனவே, மற்ற எல்லாரைக் காட்டிலும் நீங்கள் உயர்ந்திருப்பீர்கள். இயேசுகிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசம் தான் உங்கள் வெற்றி. எனவே கொண்டாடும் மனதோடு நீங்கள் சபைக்கு வாருங்கள்.

வசனம்: சகரியா 4ம் அதிகாரம் பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல. என்னுடைய ஆவியினாலே ஆகும் என கர்த்தர் சொல்லுகிறார். தேவன் ஆவியாகவே இருக்கிறார். எல்லா ஆவிகளுக்கும் மேலான கர்த்தர். அவர் சிலுவையிலே எல்லா ஆவிகளையும் மேற்கொண்டார்.

"பெரிய பர்வதமே நீ எம்மாத்திரம்? செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய்" எனக் கர்த்தர் சொல்கிறார். புதிய ஏற்பாட்டிலே, நம்மை மலையைப் பார்த்து பேசச் சொல்கிறார். ஆனால், பழைய ஏற்பாட்டிலே நமக்காக அவர் மலையிடம் பேசுகிறார். பழைய ஏற்பாட்டிலே அவர் நம்மோடு இருக்கிறார். புதிய ஏற்பாட்டிலே அவர் நமக்குள் இருக்கிறார். பர்வதம் பெரியதாக இருக்கலாம். உங்களுக்கு முன்பாக அந்த மலை சமபூமியாகும். உங்கள் திறமையினால் அல்ல. உங்கள் பட்டத்தினால் அல்ல. நீங்கள் வைத்திருக்கிற செல்வத்தினாலும் அல்ல. "நீ என் பிள்ளை. உனக்குள் நான் இருப்பதால் பர்வதம் உனக்கு முன்பாக சமமாகும்", எனக் கர்த்தர் சொல்லுகிறார்.

உங்கள் பிரச்சனைகள் மாறட்டும். உங்களுக்குள் மரித்துப்போயிருக்கும் வல்லமை எழும்பட்டும். மகிழ்ச்சியோடும், ஜெயத்தோடும் இருபது வருடங்களுக்கு முன்பாக இருந்தவர்கள் போல உங்கள் வாழ்க்கை மாறட்டும். உங்கள் இளமை திறம்ப வரட்டும். உங்கள் தரிசனங்கள் கனவுகள் திரும்ப வரட்டும். உங்கள் வாழ்க்கையில் கெட்ட சம்பவங்கள் மறந்து மகிழ்ச்சியான சம்பவங்கள் வரட்டும். ஆமென்.

"என் கரத்தை போருக்கும் என் விரல்களை யுத்தத்திற்கும் பயிற்றுவிக்கும் தேவன்." உங்கள் கைகளை விரல்களை பாதங்களை யுத்தத்திற்குப் பயிற்றுவிப்பார். தேவன் உங்களை உருவாக்குகிற விதமாய் நீங்கள் உலகத்தை ஜெயிக்க முடியும். இந்த பூமியைக் கீழ்படுத்தி ஆண்டுகொள் என தேவன் சொல்கிறார்.

நம்முடைய தேவன் யுத்தவீரனைப் போல எழுந்தருளுவார். நம்முடைய கர்த்தர் பராக்கிரமசாலியைப் போல இருக்கிறார். கண்களைத் திறக்குமுன் பராக்கிரமசாலியைப் போல அவர் எழுந்தருளுவார். தேவன் உங்களை "மகனே,மகளே", என அழைக்கிறார். அவர் உங்கள் பரம தகப்பன். "நீ என்னுடைய ஆவியிலே போகும் போது உனக்கு முன்பாக பர்வதம் சமபூமியாகும்", எனக் கர்த்தர் சொல்லுகிறார். தேவன் உங்களுக்குள் ஏற்கனவே வைத்திருக்கிறதை நான் பார்த்து உங்களுக்குச் சொல்லுகிறேன். மேகத்தை விளக்கி இது தான் உங்கள் வாழ்க்கை என உங்களுக்கு காண்பிக்கிறேன்.

## 3. விசுவாசத்தில் தேவனோடு நடத்தல்

தேவனை நம்புகிற ஜனங்கள் சாத்தானை முற்றிலும் மேற்கொள்வார்கள். நீங்கள் இயேசுவை மீட்பர் என்று மனதில் விசுவாசித்து, வாயினால் அறிக்கையிட்டதினால் இரட்சிக்கப்பட்டீர்கள். ஆவிக்குரிய உலகத்திலே உங்களுக்குத் தெரியாத பல்வேறு இரகசியங்கள் இருக்கிறது. தீர்க்கதரிசிகள் அதைக்குறித்து சொல்லும் போது நீங்கள் அதை அப்படியே நம்பி பின்பற்ற வேண்டும். தேவனுக்காக உலர்ந்த எலும்புகளை ஒரு உயிருள்ள சேனையாக உருவாக்கி எழுப்புவதுதான் என்னுடைய அழைப்பு. அதை நான் சாதாரணமாக நினைப்பதில்லை. தங்கள் தேவனை அறிந்தவர்கள் சாத்தானை மிதிப்பார்கள். நாம் நம்முடைய யுத்தத்திலே தோற்க மாட்டோம்.

**அறிக்கை:**

*நான் யுத்தத்திலே தோற்க மாட்டேன். நான் எப்போதும் ஜெயிப்பேன். ஏனெனில் என் தேவனை எனக்குத் தெரியும். நான் பரிசுத்த ஆவியோடு இணைக்கப் பட்டுள்ளேன். நான் வெளிச்சத்தோடு இணைக்கப் பட்டுள்ளேன். இயேசு எனக்குள் இருக்கிறார். நான் எப்போதும் ஜெயிப்பேன்.*

தேவனை அறிந்தவர்கள் மேன்மேலும் உயருவார்கள். கழுகைப் போல பறக்க அழைக்கப்பட்டீர்கள். நீங்கள் உங்களைப் பற்றி நினைத்ததிற்கும் மேலாக உயருவீர்கள்.

இதை நீங்கள் நம்பும்போது அற்புதம் நடக்கும். நீங்கள் அற்புதத்தை எதிர்பார்க்காவிட்டால் உங்களுக்கு கடவுள் தேவை இல்லை. உங்களால் செய்ய முடிந்த எதுவும் அற்புதம் இல்லை. அற்புதம் என்பது உங்களால் நினைத்துக்கூட பார்க்க முடியாத காரியங்களை செய்வது. அது அதிசயமாக தெரியும்.

கழுகைப்போல உயர பறக்க வேண்டும். நீங்கள் ஒரு அற்புதத்தின் பாத்திரம் என்பதை நீங்கள் மறந்து போகாதீர்கள். பள்ளத்தாக்கிலே போவது போல இருக்கலாம், தேவனுடைய மகிமையிலே நீங்கள் ஒரு பாத்திரம். தேவனுடைய ஆவியிலே நாம் இணைந்திருக்கிறோம் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். நீங்கள் உங்கள் தேவனை அறிந்தால் உங்கள் வாழ்க்கை சாதாரணமாக இருக்காது. தேவனை நாம் மட்டுப்படுத்த முடியாது.

தேவனுடைய வழி நம்முடைய எண்ணங்களுக்கு அப்பாற்பட்டது. எந்த நொடியும் நம்முடைய வாழ்க்கை மாறும். ஒரே இராத்திரியிலே உங்கள் வாழ்க்கை மாறும். உங்கள் வெளிப்பாட்டை நீங்கள் மேம்படுத்திக் கொள்ளுங்கள். வாழ்க்கையை மாற்றும் தேவன் உங்களோடு இருக்கிறார்.

**பிரித்தெடுக்கும் தேவன்:**

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை கானான் தேசத்திற்கு அழைத்துப் போனார். போகிற வழியிலே அவர்கள் தேவனை முறுமுறுத்தார்களும் அவர் மனமடிவாகும்படி நடந்து கொண்டவர்களும் வழியிலே அழிந்து போனார்கள்.

உங்கள் வாழ்க்கையிலே அற்புதங்கள் இருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் அவிசுவாசத்தினாலே தேவனை மட்டுப்படுத்தினார்கள். தேவனுடைய ஆவி உங்கள் வாழ்கையில் என்ன செய்கிறார் என்பதை அறிந்தபின்பு, உங்கள் சம்பளத்திற்காக மட்டும் தேவனுடைய ஆவியை நீங்கள் விசுவாசித்தால் அவரை மட்டுப்படுத்துகிறீர்கள். உங்கள் சூழ்நிலையை மோசமாக்கும்படி சாத்தான் திரிகிறான்.

உங்கள் ஆவியில் என்ன இருக்கிறதோ அது நடக்கும். நீங்கள் எவ்வளவாக தேவன் மேல் நம்பிக்கையாக இருக்கிறீர்கள்? அற்புத்தில் நீங்கள் நடப்பதற்கு உங்களை வெளியே கொண்டு வருவார். உங்கள் வேர் எங்கே இருக்கிறதோ, நீங்கள் எதை நம்பியிருக்கிறீர்களோ அங்கிருந்து உங்களை வெளியே அழைத்து வருவார். தேவன் ஆபிரகாமை அழைத்து, உன் தகப்பனை விட்டு வா, உன்னை பெரிய ஜாதியாக்குவேன் என்றார். நீங்கள் 100 சதவீதம் தேவனை நம்ப வேண்டும் என்பதற்காக உங்களை அவர் பிரித்தெடுப்பார்.

தேவன் மேல் மட்டும் நம்பிக்கை வைக்கும்படியாக ஒரு சூழ்நிலை வரும். நீங்கள் அதற்கு தகுதியானவர்கள் என்று தேவனுக்கு தெரிய வேண்டும். உங்கள் ஆசிர்வாதத்தைத் தடை பண்ணும்படி அநேக முற்பிதாக்களின் ஆவிகள் உங்களை பின்பற்றலாம். அடிமைத்தனத்திலிருந்து வெளியே கொண்டு வரும்போது, உங்களுக்கு எல்லாம் இழந்ததைப் போலத் தோன்றலாம். தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை பாலும் தேனும் ஓடுகிற தேசத்திலே கொண்டு போய் விடுவேன் எனக்கூறினார். ஆனால், வழியிலே இராட்சதர்கள், எரிகோ கோட்டை, சிவந்த சமுத்திரம் இருக்கும் என்று சொல்லவில்லை. நீங்கள்

தேவனுடைய வழியிலே நடக்கும் போது, நீங்கள் சிவந்த சமுத்திரத்தைக் காண்பீர்கள். நீங்கள் அதை மேற்கொள்வீர்கள். நீங்கள் முன்னே போகும் போது, இராட்சதர்கள், சிவந்த சமுத்திரம், எரிகோ, எதிர்மறையான காரியங்களை எதிர்பாருங்கள்.

நீங்கள் நேற்று சந்தித்தது, இன்று நடந்தது எதுவும் தானாக நடக்கவில்லை. அது தேவனால் முன்குறிக்கப்பட்டது. ஆபிரகாமிடம் தேவன் என்னை பின்பற்றி வா என்றார். யோசேப்பை தேவன் பிரித்து எடுத்தார். மோசேயை தேவன் வெளியே கொண்டு வந்தார். பேதுருவை, மீன் பிடித்தலை விட்டுவிட்டு அவரை பின்பற்றி வரச்சொன்னார்.

அநேக கிறிஸ்துவர்கள் நம்முடைய பலத்திலே வாழ நினைக்கிறோம். உங்களை நம்பி நீங்கள் செய்வது பலனளிக்காது. உங்கள் பலத்தினால் உண்டான விசுவாசம், நம்பிக்கை, வார்த்தை இவைகள் பலனளிக்காது.

தேவன் அன்பாயிருக்கிறார். பேதுரு நடுக்கடலிலே மீன் பிடித்துக் கொண்டிருந்தான். அதிகாலையிலே இயேசு, அவர்களுக்காக சில மீன்களையும் ரொட்டியையும் கொண்டு வந்தார். தேவன் உங்கள் மேல் வைத்திருக்கிற தீர்க்கதரிசனம், அழைப்பை அழிக்க முடியாது. தேவன் உங்களுக்காக வைத்திருக்கிறது நிச்சயமாக நடக்கும். இயேசு பேதுருவை அழைத்து "நீ என்னை நேசிக்கிறாயா?" எனக் கேட்டார். தேவன் உங்களிடம் கேட்கிறார், "நீ என்னை நேசிக்கிறாயா?". நீங்கள் தேவனை நேசிக்கும் போது தேவன் உங்கள் மேல் வைத்திருக்கிற தீர்க்கதரிசனம் அழைப்பை அழிக்க முடியாது. தேவன் உங்களுக்காக வைத்திருக்கிறது நிச்சயமாக நடக்கும்.

தேவன் உங்கள் மேல் வைத்த திட்டம் அழியாது. நீங்கள் எங்கிருந்தாலும் என்ன செய்து கொண்டிருந்தாலும், தேவன் உங்களை உயர்த்த முடியும். நீங்கள் யோசேப்பை போல சிறையில் இருக்கலாம், தானியேலைப் போல சிங்கக்கெபியில் இருக்கலாம். தாவீதைப் போல தன் ஜீவனைக் காப்பாற்றிக்கொள்ள எதிரியின் தேசத்திலே பைத்தியக்காரனைப் போல நடித்துக் கொண்டிருக்கலாம். நீங்கள் உங்கள் வாழ்க்கையை முடித்துக் கொள்ள நினைக்கிறீர்களா? உங்கள் மேல் இருக்கும் தேவனுடைய திட்டம் வீணாய்ப் போகாது. சாத்தான் உங்களை தாழ்வாக நினைக்க வைக்கிறான். யாருக்கும் நீங்கள் உதவியாக இல்லை.

உங்களை யாரும் நேசிப்பது இல்லை எனத்தோன்ற வைப்பான். என் வாழ்க்கை போய் விட்டது என சாத்தான் உங்களை நினைக்க வைப்பான்.

உங்கள் தகப்பனை பொறுத்து தேவன் உங்களை ஆசிர்வதிக்கவில்லை. உங்கள் குடும்பப்பிண்ணணியைப் பொறுத்து தேவன் உங்களை ஆசிர்வதிப்பதில்லை. தேவனுடைய ராஜ்ஜியத்தைப் பொறுத்து அவர் உங்களை ஆசிர்வதிக்கிறார். கதவுகள் திறக்கும். நீங்கள் வெளியே வரும்படி தேவன் விரும்புகிறார். நாம் எதிர்பாராத விஷயங்கள் நடக்கும் போது நாம் மனமுடைந்து போகிறோம். பிசாசு உங்கள் மேல் சொல்லும் பொய்யை மட்டும் தான் பார்க்கிறீர்கள். உங்களுக்குத் தெரியாத பல விஷயங்கள் இருக்கிறது. உங்கள் பிரச்சனைகளை நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கலாம். ஆனால் தேவன் விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிறார்.

உங்கள் பிரச்சனையை நீங்கள் சொல்லிக் கொண்டே போகலாம்... திரும்பிப் பாருங்கள் ஆவியிலே கர்த்தர் சொன்னது நடக்கும். உங்கள் நடக்கை மாறும் போது, உங்கள் வார்த்தை மாறும்போது, உங்கள் விசுவாசம் மாறும் போது, உங்கள் வாழ்க்கையிலே ஒரு மாறுதல் நடக்கும். ஒன்றுமில்லாத இடத்திலிருந்து வழிபிறக்கும்.

அந்நாட்களிலே ராகாப் ஒரு உபயோகமற்ற பெண்ணாக இருந்தாள். அவளை யாரும் மதிக்கவில்லை. ஒரு நாள் வந்தது. அவள் இஸ்ரவேலின் தேவனோடு கூட உடன்படிக்கை பண்ணினாள். அவள் மதிக்கக்கூடிய பெண்ணாக மாறினாள்.

மதில்களை உடைத்து தேவன் உங்களை உயர்த்த முடியும். மலைகளை உடைத்து தேவன் உங்களை உயர்த்த முடியும். பள்ளத்தாக்குகளை அசைத்து தேவன் உங்களை உயர்த்த முடியும். நீங்கள் தேவனுடைய பிள்ளை. உங்கள் அழைப்பு சாதாரணமானது அல்ல. தேவன் உங்களை உயர்த்தும்படி விரும்புகிறார். அப்போது தேவனுடைய ராஜ்ஜியம் உயரும். உங்கள் அழைப்பை நீங்கள் உணருங்கள். உங்களுக்கெதிராக எது வந்தாலும் சரி. நீங்கள் பெரியவர்கள். நீங்கள் மிகவும் உயர்ந்தவர்கள் ஏனெனில் இயேசு உங்களுக்குள் இருக்கிறார். தேவன் தம்முடைய ராஜ்ஜியத்தைக் கட்டுவதற்கு உங்கள் மேலும் என்மேலும் பிரியமாயிருக்கிறார். நாம் உயரும் போது அவர் ராஜ்ஜியத்தைக்

கட்டுவோம். நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள். நீங்கள் உலகத்திற்கு வெளிச்சம். தேவன் உங்கள் மேல் நம்பிக்கையாயிருக்கிறார்.

## ஆவிக்குரிய இரகசியங்களை பெற்றுக்கொள்ளுதல்

**எரேமியா 33:3.**

**"என்னை நோக்கிக் கூப்பிடு நான் உனக்கு மறு உத்தரவு கொடுப்பேன். நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களைச் செய்வேன்"**

தேவனிடத்திலிருந்து இரகசியங்களைப் பெற்றுக் கொள்ளும்படி நாம் வந்திருக்கிறோம். சாத்தானை எங்கே அடிக்க வேண்டுமென்று நமக்குத் தெரியாது. நீங்கள் இரகசியங்களைத் தெரிந்து கொள்ளும்போது சாத்தானை எப்படி மேற்கொள்வது என்பது உங்களுக்குத் தெரியும். "என்னை நோக்கிக் கூப்பிடு", என ஆண்டவர் சொல்கிறார். நீங்கள் தேவனை நோக்கிக் கூப்பிடும் போது பெரிய காரியங்களைக் குறித்துக் கேட்காமல், 'என்னைக் காப்பாற்றும்' என்கிறீர்கள். எல்லார் மேலும் ஒரு அழைப்பு, தேவனுடைய சித்தம் இருக்கிறது. நீங்கள் தேவனுடைய ஆவியோடு நடக்க வேண்டும். உங்கள் அழைப்பைத் தெரிந்து கொள்ள வேண்டும். எல்லா விஷயமும் ஆவிக்குரியது. எல்லாம் இயற்கைக்கு அப்பாற்பட்டது.

"உனக்குத் தெரியாததும் நீ அறியாததுமான காரியங்களை நான் உனக்குச் சொல்லித் தருவேன்", என ஆண்டவர் சொல்லுகிறார். நீங்கள் நினைக்காத, யோசிக்காத விஷயங்கள், சொன்னால் புரிந்து கொள்ள முடியாத காரியங்கள் பெரிதும், இரகசியமானதைத் தெரிவிப்பேன் என்று தேவன் சொல்லுகிறார்.

உங்கள் வாழ்க்கையில் தோல்விகள் ஏனென்று தெரியாது. நான் ஜெபிக்கிறேன் , உபவாசிக்கிறேன், இரவு ஜெபத்திற்கு போகிறேன், ஆனால் ஏன் இது நடக்கிறது? என் வாழ்கையிலே ஏன் ஜெயமில்லை? என் முன்னோர்களின் காலத்திலிருந்து ஏன் இந்தப் போராட்டம் என் பிள்ளைகள் வரை தொடர்கிறது? எங்களால் தாங்க முடியவில்லை எனக் கலங்குகிறீர்களா? "பெரிய காரியங்களை உங்கள் வாழ்க்கையில் செய்வேன்", என ஆண்டவர் சொல்கிறார்.

**அறிக்கை** *கர்த்தாவே என் மனக் கண்களைத் திறந்தருளும்.*

"உங்கள் மனக்கண்களைத் திறப்பாராக", எனப் பவுல் சபைகளுக்கு எழுதுகிறார். இந்த உண்மை உங்களுக்குத் தெரியாவிட்டால் இயேசுவின் நாமத்தில் பாடுகளை சகிக்கிறேன் என்பீர்கள். என்னுடைய நாமத்தினிமித்தம் துன்பப்படுவீர்கள் என இயேசு சொல்லியிருக்கிறார் என்கிறீர்கள், அது நமக்கு அல்ல. இயேசுவை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு.

இன்று உங்கள் ஜெபநிலை மாறட்டும். பெரியதும் மறைந்திருக்கிறதுமான விஷயங்களை எங்களுக்கு காண்பியுங்கள் என்று ஜெபியுங்கள். உங்கள் வாழ்க்கையிலே அதைக் காணும் போது வெகு சீக்கிரமாக முதன்மை நிலைக்கு மாறுவீர்கள். இயற்கைக்கு அப்பாற்பட்டதை பார்க்கத் தொடங்கினால், மிகவும் சுலபமாக சாத்தானை மேற்கொள்வீர்கள். அவன் உங்களுக்கு விரோதமாக நிற்க முடியாது. சாத்தான் உங்களை விட்டு ஓடிப் போவான் என வேதம் சொல்கிறது. நீங்கள் எதிர்த்து நில்லுங்கள் ஏனென்றால் சத்துருவானவன் சிங்கம் போல சுற்றித் திரிகிறான். உங்களுக்குத் தெரியாமலே சத்துரு தொடக் கூடிய சில விஷயங்கள் இருக்கிறது.

**சங்கீதம் 50:15 – "ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய"**.

சங்கீதம் ர்லீநுசுடுஜமே "ாவவி:.˙..˙.ழறழ.வயஅடை-டிடைடந.உழஅ.˙.டழழமரிிரி?டீழழமஜீளயட அளருஊாயிவநசஜீ23" ர்லீநுசுடுஜமே "ாவவி:.˙..˙.ழறழ.வயஅடை-டிடைடந.உழஅ.˙.டழழமரிிரி?டீழழமஜீளயட அளருஊாயிவநசஜீ23" 23:4 – **"மரண இருளின் பள்ளத்தாக்கிலே நான் நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்"**.

**அறிக்கை:** *நான் தேவனை நோக்கிக் கூப்பிடுவேன் அவர் எனக்கு மறு உத்தரவு கொடுப்பார். பெரிதும் அறியாததுமான காரியங்களை எனக்குக் காண்பிப்பார்.*

உங்களுக்கு யோசேப்பு, தானியேல், எஸ்தர் என்ற வேறே பெயர் இருக்கிறது. நீங்கள் தேவனை நோக்கிக் கூப்பிடுவீர்கள். நீங்கள் ஒரு சிங்கம் போல வெளியே வருவீர்கள். பார்க்கிறவர்கள் உங்களிடம் வந்து என்ன சம்பவித்தது? எப்படி இது சம்பவித்தது எனக் கேட்பார்கள். நான் நோக்கிக் கூப்பிடுகிற தேவனை எனக்குத் தெரியும் என்பதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

நாம் கழுகினைப் போல மேலே பறக்க அழைக்கப் பட்டிருக்கிறோம். சேற்றிலிருந்து அவர் நம்மைத் தூக்குகிறார் என்று வேதம் சொல்கிறது. தாவீது கோலியாத்தைக் கொன்று இஸ்ரவேல் ஜனங்களை மீட்டார். ஆனால் தேசம் முழுவதும் தாவீதைக் கொல்ல வருகிறது. அவர் பெலிஸ்தருடைய நாட்டிற்கு போகிறார். பெலிஸ்தியரிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அவர் பைத்தியக்காரனைப் போல நடித்தார். ஆபத்திலிருந்து தப்பிப்பதற்கு இப்படி ஒரு வேஷத்திலே நீங்கள் இருக்கலாம். தேவன் உங்களை விடுவிக்கிறார். உங்களை உயர்த்துவேன் எனக் கர்த்தர் சொல்லுகிறார்.

## 5. தேவனுடைய சிட்சை கடினமானதா?

தேவனுக்கு மகிமை உண்டாவதாக. நம்முடைய தேவன் ஜீவனோடு இருக்கிறார். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன், யாக்கோபின் தேவன், அவர் என்னுடைய தேவன். அவர் என்னோடு கூட இருக்கிறார். எனக்குள் இருக்கிறார். அவர் இங்கே இருக்கிறார்.வல்லமையான காரியங்களைச் செய்வார்.

**ஏசாயா 35:1-7 "வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தைப்போல் செழிக்கும்"** நம்முடைய தேவனின் மகிமை கொடுக்கப்படும் அதை நாம் பார்ப்போம். குருடரின் கண்கள் திறக்கப்படும். செவிடரின் செவி திறக்கப்படும். முடவரின் கால்கள் மான்களைப்போலத் துள்ளிக்குதிக்கும். தளர்ந்த கைகளைத் திடப்படுத்துங்கள். தள்ளாடும் முழங்கால்களைப் பலப்படுத்துங்கள். மனம் பதறுகிறவர்களைப் பார்த்துச் "நீங்கள் திடன் கொள்ளுங்கள், பயப்படாதிருங்கள். உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும், பதிலளிக்கவும் வருவார்",என்று சொல்லுங்கள்.

வாக்குத்தத்தம் நிறைவேற நீங்கள் காத்திருக்கிறீர்கள். ஆனால் நடக்கவில்லை. நீண்ட நாள் காத்திருப்பதினால் சோர்ந்து போகிறீர்கள். காரியங்களைப் பார்த்தால் அது நடக்காது எனத் தோன்றுகிறதா? உங்கள் கைகள் ஒருவேளை தளர்ந்து இருக்கலாம், உங்கள் கால்கள் தளர்ந்து போயிருக்கலாம், ஆனால் கர்த்தர் சொல்லுகிறார், "பயப்படாதிருங்கள்". பயம் தேவனிடத்திலிருந்து வரவில்லை. இது அசுத்த ஆவியிலிருந்து வருகிறது. பயம் என்பது உண்மை அல்ல. அது அசுத்த ஆவியினால் உண்டாக்கப்பட்ட கற்பனையான ஒன்று. அது வைரஸ் மாதிரி.

கர்த்தர் உனக்கு வாக்குத்தத்தம் கொடுத்திருக்கலாம். ஆனால் சூழ்நிலை வித்தியாசமாக இருக்கலாம். இஸ்ரவேல் ஜனங்கள், எரிகோ மதிலை ஒவ்வொரு நாளும் ஒருமுறையும், ஏழாவது நாள் ஏழு முறையும் சுற்றி வந்தார்கள். ஏழாவது நாள், ஏழாவது முறைதான் அந்த அற்புதம் நடந்தது. உனக்குள் ஏதோ நடக்கிறது. அற்புதங்களைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக நீங்கள் உருவாக்கப்படுகிறீர்கள். நீங்கள் பெரிய ஆலமரமாகி தேவனுடைய செட்டைகளின் கீழ் இருக்கிறீர்கள்.

யாரும் உங்களைத் தொட முடியாது. உங்கள் பக்கத்தில் யாரும் நெருங்க முடியாது.

**உபாகமம் 29:2**

எகிப்திலே பார்வோனுக்கு செய்த சகலத்தையும் ஆயிரக்கணக்கான இஸ்ரவேல் ஜனங்களின் சொந்தக்கண்கள் கண்டது. ஆனால் அதைப்புரிந்து கொள்ளவில்லை. ஏனென்றால் கேட்கத்தக்க காதையும், பார்க்கத்தக்க கண்களையும், உணரத்தக்க மனதையும் தேவன் கொடுக்கவில்லை. நீங்கள் பார்த்தீர்கள். ஆனால், அது உங்களுக்கு புரியவில்லை. உங்கள் வாழ்க்கையில் என்ன நடக்கிறது என்பது உங்களுக்கு புரியவில்லை. நீங்கள் புரிந்து நடக்கக் கூடாது, விசுவாசித்து நடக்க வேண்டும்.

உங்கள் கைகளைத் திடப்படுத்துங்கள், கால்களை உறுதிப்படுத்துங்கள். ஏனெனில் தேவன் வருவார். உங்களுக்கு சரிக்கட்டுவார். தேவனுடைய அபிஷேகம் உங்களுக்குள் இருக்கிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் என்று நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

**எபிரேயர். 12:7**

நீங்கள் சிட்சையைச் சகிப்பவர்களாக இருந்தால் தேவன் உங்களை புத்திரராக நடத்துகிறார் என்று அறியுங்கள். சிட்சை என்பது வேதனை அல்ல. உங்களை பெலப்படுத்தும்படிக்கு அது உங்களுக்கு தேவை. சிட்சை என்பது, மாற்றம். அன்றியும் நமக்கு சரீர தகப்பன்மார்கள் நம்மை சிட்சித்து நடத்தினார்கள். சிட்சை என்பது சரியான வழியில் போக பயிற்சிக்குள்ளாக்குவது. சிட்சை இல்லையெனில் வளர முடியாது. சரியான வழியிலே நீங்கள் போகாத போது, ஆசிரியர்கள் உங்களை அடிப்பார்கள் அது தண்டனை. எனவே சிட்சைக்கும் தண்டைனைக்கும் வித்தியாசம் இருக்கிறது.

தேவன் நம்மை சிட்சிக்கிறார். உங்களால் எதையெல்லாம் செய்ய முடியும் தேவனால் எதையெல்லாம் செய்யமுடியும் என்பதை சிட்சை கற்றுத் தருகிறது. கானான் தேசத்திற்கு போகும்முன், தேவன் அவர்களை சிட்சிக்க முடிவு செய்தார். தேவன் எவ்வளவு பெரியவர் என்றும், இஸ்ரவேல்

ஜனங்கள் எவ்வளவு விசேஷித்தவர்கள் என்பதைக் காண்பிப்பதற்காகவும் வனாந்தரத்திலே தேவன் இஸ்ரவேல் ஜனங்களை சிட்சித்தார். அவர்கள் இருதயம் கடினமாயிருந்தது. எகிப்திலே எப்படி வேண்டுமானாலும் இருந்தோம் இந்த சிட்சை எங்களுக்கு பிடிக்கவில்லை என்றார்கள்.

**வசனம்: மத்தேயு 22: 11-14** - இராஜவஸ்திரம் இலவசமாக கொடுக்கப்பட்டாலும் ஒருவன் மட்டும் பழைய வஸ்திரம் தரித்துக்கொண்டு வந்தான். அவன் அழுகையும் பற்கடிப்புமுள்ள இடத்திலே போடப்பட்டான்.

**உபாகமம் 29:5**

வனாந்தரத்திலே இஸ்ரவேலர் 40 வருஷம் பயணிக்கும்போது, அவர்கள் வஸ்திரம் பழமையாகவுமில்லை, அவர்கள் பாதரட்சைகள் தேய்ந்து போகவுமில்லை. விசுவாசத்திலே நீங்கள் நடக்கும்படி பழக்குவிக்கிறார். மனிதன் அப்பத்தினால் மட்டும் பிழைப்பதில்லை. இயேசு இந்த உலகத்திலே இருக்கும் போது, ஒரு நாள் சீஷர்களுடன் படகில் மறுகரைக்குச் சென்றார். அவர் அடித்தட்டிலே போய்த் தூங்கி விட்டார். கடல் நடுவிலே படகு அசைந்தது. தேவன் அவர்களை பயிற்றுவித்துக் கொண்டிருந்தார். சீஷர்கள் பயந்தார்கள், ஆனால் ஒன்றும் இழக்கவில்லை.

சிட்சை என்பது ஒழுக்கத்தைக் கொண்டு வருகிறது. ஆனால் நீங்கள் வெட்கப்பட மாட்டீர்கள், நீங்கள் மரிக்க மாட்டீர்கள். வியாதி வராது, ஏனெனில் அதை இயேசுகிறிஸ்து அதை சிலுவையில் மேற்கொண்டார். பிரட்சனை எதாவது வந்தால் நீங்கள் அதற்கு எதிர்த்து நில்லுங்கள். சிட்சை ஆத்துமாவைப் பயிற்றுவிக்கிறது.

தேவன் உங்களுக்காக ஆயத்தம் பண்ணினதைக் கண் கண்டதுமில்லை, காது கேட்டதுமில்லை, அது எந்த மனிதனுடைய உள்ளத்திலும் தோன்றினதுமில்லை. தேவனுடைய திட்டத்தை ஆவி தனக்குள் கொண்டிருக்கிறது. முன்பதாக ஆவி மரித்ததாயிருந்தது. அது தேவனிடத்திலிருந்தது. ஆனால் இரட்சிக்கப்பட்டவுடனே அது உயிரடைந்தது. இன்று துள்ளிக்குதித்து நான் ஜெயிப்பேன் என சந்தோஷமாயிருக்கிறது. ஆத்துமா ஏற்கனவே ஆவியை விட பல வருஷங்கள் வயதானது. ஆவி சொல்கிறது, நான் ஜெயிப்பேன் என்று.

ஆனால் ஆத்துமா அதற்கு எதிர்விதமாகப் பேசுகிறது. ஆவியும் ஆத்துமாவும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறது.

விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவரும் அவர்தான். நீங்கள் விசுவாசத்தைப் பெலப்படுத்தும்படியாக உபவாசிக்கலாம். ஆனால், அதற்கான பெலனைக்கொடுத்து அதை முடிக்கிறவர் கர்த்தர்.

“என் வாழ்க்கையின் முடிவுக்கு நான் வந்துவிட்டேன், என்னால் முடிந்தெல்லாம் செய்து விட்டேன். இனிமேல் என்னால் ஒன்றுமில்லை”, என்று சோர்ந்து போய்விட்டீர்களா?. இது ஒரு யுத்தம், என்னவெல்லாம் உங்களால் முடியுமோ அதை செய்யுங்கள். தேவன் உங்களை யுத்ததத்திற்கு கொண்டு போக வேண்டும், “நீர் நடத்துகிற இடத்திற்கு நான் போவேன்”,என்று நம் உள்ளத்திலே ஒரு தீர்மானம் எடுக்கவேண்டும். உள்ளார்ந்த மனிதன் புதிதாக்கப்படுகிற நேரம் இது. உங்கள் சுயத்தின் முடிவிற்கு நீங்கள் வர வேண்டும்.

மனிதன் அப்பத்தினால் மட்டும் பிழைப்பதில்லை என்பதை உணர்த்துவதற்காக அவர்களை 40 வருஷம் வனாந்திரத்திலே நடத்தினார். மோசே இராஜாவின் அரண்மனையிலே வளர்ந்ததினாலே, யுத்தக் கலை கற்றிருந்தார். அவர் இஸ்ரவேல் ஜனங்களை தம்முடைய திறமையினால் இரட்சிக்கலாம் என ஆத்துமாவிலே நினைத்தார். அப்படி மாம்சீகத்தில் போராட நினைத்ததால் 40 வருஷம் வனாந்ததரத்திலே அலைந்தார்.

ஒவ்வொரு படி ஆவி மேலே போவதற்கும் ஆத்துமா கீழே வர வேண்டும். உங்கள் ஆவி சரியான இடத்திலே இருக்கும் போது, நீங்கள் சரியாக இருக்கும் போது, சிட்சையிலே மகிழுவீர்கள். அடுத்தவர் பார்க்கும் போது, சிட்சை கடினமாகத் தெரியும். ஆனால், உங்களுக்கு அது சந்தோஷமாக இருக்கும்.

உங்கள் வாழ்க்கையிலே ஒரு பெரிய திட்டம் இருக்கிறது. நீங்கள் அவருக்கு ஒப்புக் கொடுங்கள். அதை தேவன் வெளிப்படுத்துவார். சில நேரங்களில் நீங்கள் சொல்லுகிறீர்கள், “நான் இங்குதான் வாழ்ந்தேன் இங்குதான் மரிப்பேன், இங்குதான் அடக்கம் பண்ணப்படுவேன்”, என்று. நீங்கள் வளரும் படி அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே தேவன் இயங்கிக் கொண்டிருக்கிறார். நீங்கள் ஆவியிலே இணைந்திருந்தால் சிட்சை உங்களுக்குப் பாரமாகத் தெரியாது. இணைக்கப் படாதிருந்தால், தேவன் இடைபட முடியாது. எப்போதும் தேவ ஆவியிலே இணைந்திருங்கள். நீங்கள் ஒரு ஆவி என்பதை மறந்து விடாதீர்கள். உங்களைச் சுற்றி எது வந்தாலும் நீங்கள் பலமாக நிற்பீர்கள்.ஒன்றும் உங்களை அசைக்க முடியாது.

## 6.நீ மேலே போ அவர்களை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன்

பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் பெரிய காரியங்களைச் செய்ய விரும்புகிறார். நீங்கள் வேதனையோடும், கவலையோடும், துன்பத்தோடும் இருந்து ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்காத பட்சத்திலே உங்களைக் கொண்டு எதுவும் செய்ய முடியாது. ஆகவே ஆண்டவரிடத்தில் ஒப்புக்கொடுப்பதுதான் விசுவாசம்.

இயேசுகிறிஸ்து ஆம் என்று சொல்லும் போது அதை யாரும் இல்லை என்று சொல்ல முடியாது. தேவன் உங்களுக்குள்ளே ஆரம்பித்திருக்கிற நல்ல காரியத்தை செய்யவிடாமல் சத்துருவானவன் உங்கள் சூழ்நிலையைக் காண்பித்து முடியாது என்பதுபோல் உங்கள் சிந்தனையைத் தாக்குவான்.

**அறிக்கை:**

*மனம் ஒரு போர்க்களம். சிந்தனைகளே அதில் இடைவிடாமல் நடக்கும் போர்கள். ஆகவே சிந்தனையிலும்,மனதிலும் தேவனை விசுவாசித்து, நாவிலே அறிக்கை செய்ய வேண்டும்.*

நீங்கள் உங்கள் வாயைத்திறந்து துதிக்காவிட்டால் உங்கள் எதிர்காலம் மூடப்பட்டுவிடும். உங்கள் வாயினால் நீங்கள் அறிக்கை செய்தால் எதிர்காலம் வளமாகும். நீங்கள் எதிர்காலத்தை குறித்து என்ன வேண்டுமென்றாலும் நினைக்கலாம். இயேசு கர்த்தரென்று விசுவாசித்து அறிக்கை செய்தால் போதும். அப்போது இரட்சிக்கப்பட்டு விடுதலையாக்கப்படுவீர்கள்.

தாவீதை இஸ்ரவேலின் மேல் அபிஷேகம் பண்ணினார்கள் என்று பெலிஸ்தர் கேள்விபட்டபோது, அவர்களெல்லாரும் தாவீதை தேடிவந்தார்கள்.

தாவீது சிறுவனாக இருக்கும் போதே அரசனாக அபிஷேகம் பண்ணப்பட்டான். சாமுவேல் தீர்க்கதரிசி தாவீதை ராஜாவாக அபிஷேகம் பண்ணியும், எந்த காரியமும் நடைபெறாமல் இருந்தது. தேவனுக்கு உங்களைக் குறித்து ஒரு திட்டம் இருக்கிறது. மனிதனானவன் ஆவி, ஆத்துமா, சரீரத்தை உடையவனாயிருக்கிறான். ஆரம்பத்திலே ஆதாம் ஏவாளை அவர் சாயலாக உருவாக்கினார். நம்மை தாயின் கர்ப்பத்திலே உருவாவதற்கு முன்பே அவர் அறிந்திருக்கிறார். நாம் சரீரத்திற்குள்ளாக வாசம் பண்ணுகிறோம். தேவன் நம்மை ஆவியினாலே உருவாக்கி இந்த உலகத்திலே நம்மைக் கொண்டு அவர் என்ன செய்ய வேண்டும் என்றிருந்தாரோ அதை நமக்கு செய்ய விரும்புகிறார். எல்லா ஆவிகளையும் மேற்கொண்ட இயேசுவின் ஆவி நமக்குள்ளிருந்தும் மற்ற ஆவிகளை எப்படி மேற்கொள்ள வேண்டும் என்பது நமக்குத் தெரியவில்லை.

நாம் பிறந்தவுடனே நம்மை அழிக்க வேண்டும் என்று சாத்தான் நினைக்கிறான். மோசே பிறக்கும் போதே அவன் வாழ்க்கையிலும் தேவனுடைய நோக்கம் இருந்தது. 400 வருஷம் அடிமைகளாக இருந்த ஜனங்களை விடுதலையாக்க வேண்டும் என்பதே அந்த நோக்கம். சாத்தான் மோசேயைத் தவிர மற்ற எல்லா பிள்ளைகளையும் கொண்று போட்டான். அதுபோல யாக்கோபையும் அழிக்க வேண்டுமென சாத்தான் நினைத்தான். ஆனால் முடியாமல் போனது. ஏனென்றால் அவனுடைய வாழ்க்கையிலும் ஒரு சித்தம் இருந்தது. அவன் இஸ்ரவேலின் தகப்பன் ஆக

வேண்டுமென்பது தான். நீங்கள் பிறந்த உடனே உங்களையும் அழிக்க சாத்தான் திட்டம் தீட்டினான். ஆனால் முடியவில்லை. ஏனெனில் இயேசுவின் அபிஷேகத்திற்குள்ளே நீங்கள் இருக்கிறீர்கள்

தாவீது அபிஷேகம் பண்ணப்படுவதற்காக சாமுவேல் தாவீது வீட்டிற்கு வரும் போது அவன் சிறுபிள்ளையாக இருந்தான். அவன் தகப்பன் அவனை சாமுவேலிடம் காண்பிக்கவில்லை. ஆனால் சாமுவேல் தாவீதை அழைத்து அபிஷேகம் பண்ணினார். நாம் பலவீனமாக இருக்கிறோம், நம்மால் என்ன செய்யமுடியும்? குடும்பப் பிண்ணணி சரியில்லை. நான்தான் என் வீட்டில் முதல் பட்டதாரி என்னால் முடியாது என நீங்கள் நினைக்கலாம். மனிதன் முகத்தைப் பார்க்கிறான். திறமையையும், பட்டத்தையும் பார்க்கிறான். ஆனால் தேவன் உங்களுக்கென்று ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார். அதை இன்றைக்கு நிறைவேற்றுவார். தலைமுறை தலைமுறையாக சாத்தான் உங்களை வஞ்சித்திருக்கிறான். ஆனால் இன்று கர்த்தர் உங்களைக் குறித்து என்ன திட்டமிட்டிருந்தாரோ அதை நிறைவேற்றுவார். நீங்கள் இங்கிருப்பதன் நோக்கம் ஆண்டவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காகத்தான். இந்த அபிஷேகத்தோடு நீங்கள் இணைந்திருப்பதால் தேவன் அநேக காரியங்களை உங்கள் வாழ்க்கையில் உங்களைக் கொண்டு உங்கள் குடும்பத்தில செய்ய இருக்கிறார். இந்த வருடம் உங்களுடைய வருடம். ஆகவே மேற்சொல்லப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தையை நீங்கள் விசுவாசிப்பீர்களானால், அது உங்கள் வாழ்க்கையிலும் நிறைவேறும். உலகத்தை நீங்கள் தலைகீழாக மாற்றப் போகிறீர்கள். உங்களை அவன் அழிக்க வேண்டுமென்று நினைத்திருந்தால் என்றைக்கோ அதை செய்திருப்பான். ஆனால் உங்களை அழிக்க முடியாது. ஏனெனில் ஆண்டவருடைய திட்டம் உங்கள் மேலிருக்கிறது.

ஆண்டவருடைய திட்டத்தை சுமந்து கொண்டிருக்கிற சபையாக இந்த சபை இருக்கிறது. தாவீதின் மேல் அபிஷேகம் பண்ணப் பட்டிருப்பதை சிங்கத்தையும், கரடியையும், கொன்றதன் மூலமும், கோலியாத்தை வீழ்த்தியதன் மூலமும் அவன் அறிந்து கொண்டான். கர்த்தர் நம்மை உயர்த்தி, வல்லமையான காரியத்தை செய்து, உன்னதமான இடத்தில் நம்மை வைக்க விரும்புகிறார்.

தாவீது அபிஷேகம் பண்ணப்பட்டிருந்ததால் அவன் அழைப்பு அவனுக்குத் மகத்துவமாய் இருந்தது. இந்த வருடம் உங்கள் அழைப்பை

நோக்கிப் பார்க்கப் போகிறீர்கள். “மேலே போ சத்துருக்களையும், சத்துருக்களின் ஆவிகளையும் உன் கையில் ஒப்புக் கொடுப்பேன்”, என்று கர்த்தர் சொல்லுகிறார். எல்லாம் ஆவிக்குரியது. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்ற நிலைமையில் நீங்கள் போராடிக் கொண்டிருக்கிறீர்களா?

இயேசுகிறிஸ்துவின் ஆவியோடு கூட இணைக்கப்படும் போது அநேக காரியங்களில் இருந்து நீங்கள் விடுதலையாக்கப்படுகிறீர்கள். தேவனுடைய நாமம் பலத்த துருகம். நீதிமான் அதற்குள் ஓடி சுகமாயிருப்பான் .ஆகவே நீங்கள் உங்கள் அழைப்பை பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால் தேவனுடைய அரவணைப்பில் இருக்க வேண்டும்.

ஆவிக்குரிய உலகத்திலே இயேசு என்ற நாமம் ஒரு பிரபலமான நாமமாக இருக்கிறது. நாம் எப்போதும் இயேசுவின் நாமத்தை சார்ந்தவர்களாக இருக்க வேண்டும். காலை, மாலை, மதியவேளையிலே நாம் வாயைத்திறந்து அறிக்கையிட்டு இயேசு என்னோடு கூட இருக்கிறார் என்று சொல்லவேண்டும்.

**சங்கீதம் 1:1**

**துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும் பாவிகளுடைய வழியில் நில்லாமலும் பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்...**

நாம் சிலகாரியங்களைச் செய்யக் கூடாது என வேதம் சொல்லுகிறது. ஏனெனில் நாம் அநேக வல்லமையான காரியங்களைச் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம். நீங்கள் கர்த்தருடைய வேதத்திலே பிரியமாயிருங்கள். ஆண்டவர் காரியங்களை நேர்த்தியாகச் செய்கிறார். நாம் நம் வாழ்க்கையில் சிலகாரியங்களை சரியாகச் செய்யவில்லையென்றால் தேவன் நம்மில் இடைபடவும், நம்மை உயர்த்தவும் முடியாது. நீங்களும் உங்கள் குடும்பமும் தேவனில்

நிலைத்திருக்கும் போதுதான் மேலே போக முடியும். நீங்கள் ஒருவருக்கொருவர் மகிழ்ந்திருக்கும் போதுதான் தேவனும் உங்களோடு கூட மகிழ்ந்திருக்க முடியும். ஆண் “போ அவர்களை (சத்துருக்களை) உன் கையில் ஒப்புக்கொடுப்பேன்! நீ மேலே போ”. என்று ஆண்டவர் சொல்லுகிறார்,

நான் உயரே போவேன் ஏனெனில் இதைச் சொன்னவர் உண்மையுள்ளவர். ஆண்டவர் சொன்னால் நான் நிச்சயமாகவே உயரே போவேன். நிச்சயமாகவே சத்துருவை என் கையில் ஒப்புக்கொடுப்பார். ஆமென்.

## 7.உங்கள் ஆயுதத்தை இராஜாக்களுக்கு எதிராக ஆயத்தப்படுத்துங்கள்

ஆண்டவருடைய வாக்குத்தத்தங்கள் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கிறது. வாக்குத்தத்தம் தேவனுடையது. ஆனால் ஆமென் என்பது உங்களுடையது. நீங்கள் ஆமென் என்று சொல்லிப் பெற்றுக்கொள்ள வேண்டும். நல்ல வார்த்தை வரும்போது ஆமென் என்று சொல்லுங்கள் அது உங்கள் வாழ்க்கையில் அப்படியே நிறைவேறும். நீங்கள் அதை அறிக்கை செய்யும் வரை அது நடக்காது. இரட்சிப்பு உங்கள் நாவில் இருக்கிறது. உங்கள் ஆவியிலே ஒன்றை நான் கொடுக்க விரும்புகிறேன். உங்கள் பாத்திரம் சுத்தமானதாக திறந்து இருந்தால், நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

எல்லோருக்குமே போராட்டங்கள் இருக்கிறது. கெத்சமனே தோட்டத்திலே இயேசுவிற்கும் கடினமான போராட்டம் இருந்தது. அவரவர்களுக்கு ஏற்ற விதமாக ஆவியிலே போராட்டம் இருக்கும். அதை நாம் ஜெயம் கொள்ளவேண்டும். வெற்றி உங்களுடையது. முடிவிலே நாம்தான் நின்று கொண்டிருப்போம். உங்களுக்குத் தெரியாமல் இருளின் அதிகாரங்கள் கிரியை செய்யும்.

தேவனுடைய சமூகத்திலே போய் அதிகாரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். பெலிஸ்தர் தாவீதை நெருக்கினதினாலே அவன் ஒரு அரணிப்பான இடத்திற்கு செல்ல வேண்டியதாகி இருந்தது. அவன் தன்னைத் தான் பெலப்படுத்திக் கொண்டு மலையின் மேல் ஏறி வருகிறான். உங்கள் துப்பாக்கியை இராஜாக்களுக்கு எதிராக வையுங்கள். நீங்கள் எந்த இராஜாவிற்கும் குறைவில்லை. நீங்கள் ராஜாக்களுக்கு இணையாயிருக்கிறீர்கள். நீங்கள் மேலே போக விரும்பும் போது நீங்கள் ஜெயமாக மாறுவீர்கள்.

**ஏசாயா 60 : 1-3.** தேவன் சொல்லுகிறார், **"எழும்பிப் பிரகாசி".**

**அறிக்கை:**

என்மேல் வெளிச்சம் உதித்தது. கர்த்தர் என்மேல் உதித்தார். நான் எழும்பிப் பிரகாசிப்பேன்

இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும். நீங்கள் உங்களோடு மற்றவர்களை சம்மந்தப்படுத்திப் பார்க்கக்கூடாது. ஏனெனில் நீங்கள் தேவனுடைய மகிமையாயிருக்கிறீர்கள். உங்களை வித்தியாசமாக பாருங்கள். காரியம் மோசமாயிருக்கலாம், சூழ்நிலை மோசமாயிருக்கலாம் நீங்கள் ஒத்துக்கொள்ளும்வரை, அதாவது நீங்களே அழைக்கும்வரை சாத்தான் உங்களைத் தொட முடியாது. உங்கள் மேல் தேவனுடைய மகிமை விளங்குகிறது. நீதியின் சூரியன் உதிக்கிறது. உங்களை நீங்கள் வித்தியாசமாக பார்க்கும் போது வித்தியாசமாக மாறுவீர்கள். நீங்கள் உங்களை வித்தியாசமாக அறிக்கையிடுங்கள். நீங்கள் பிரித்தெடுக்கப்பட்ட என்னுடைய ஜனம். நீங்கள் பரிசுத்தமானவர்கள். ஒருவரும் உங்களுக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை.

நீங்கள் கிறிஸ்தவனாக மாறும் போது நீங்கள் விஷேசித்தவர்கள். உலகம் பார்ப்பதுபோல நாம் பார்ப்பதில்லை. உலகம் புறம்பான அலங்காரத்தைப் பார்க்கிறது. கடவுள் உங்கள் உள்ளத்தைப் பார்க்கிறார். உங்கள் ஆவியிலே என்ன இருக்கிறதோ அதைத்தான் தேவன் பார்க்கிறார். உங்கள் குடும்பத்திலே நீங்கள் சிறியவராக இருக்கலாம், தள்ளப்பட்டவராக இருக்கலாம். உங்கள் அழைப்பிலே இருந்து நீங்கள் வெகுதூரம் இல்லை. போராடி ஜெபித்து நீங்கள் அருகிலே வந்து விட்டீர்கள்.

நமக்கு நான்கு கண்கள் இருக்கிறது. இரண்டு சரீரப் பிரகாரமான கண்கள், இரண்டு ஆவிக்குரிய கண்கள். இந்த உலகம் குருடாயிருக்கிறது அதனால் பார்க்க முடியாது. நீங்களும் உங்கள் சந்ததிகளும் ஆண்டவருடைய பார்வையில் விலையேறப்பட்டவர்கள். தேசங்கள் உங்களுடைய வெளிச்சத்திற்கு வரும்.

**அறிக்கை:**

தேசங்கள் என் வெளிச்சத்திற்கு வரும்.

பலிபீடத்தோடு நீங்கள் இணைந்திருக்கும்போது உங்கள் வாழ்க்கையிலும் அது நிறைவேறும். ஒவ்வொரு விடுமுறைக்கும் நீங்கள் பறக்கப் போகிறீர்கள். ஏனென்றால் தேசங்கள் உங்களை அழைக்கும். தேசத்தின் மேல் அக்கினியை அனுப்பி பெரியகாரியங்களைப் பண்ணப்போகிறீர்கள். அநேக அரண்களை கீழே இழுக்கவேண்டும். பெரிய வல்லமையிலே நாம் இயங்க வேண்டும். தேசங்களும், இராஜாக்களும் உங்கள் வெளிச்சத்திற்கு வருவார்கள்.

நீங்கள்தான் இயற்கைக்கு அப்பாற்பட்டவர்கள். நாம் பார்க்கும் எல்லாவற்றையும்விட நீங்கள்தான் பெரியவர்கள். கண்ணால் பார்க்கக்கூடிய எல்லாவற்றிற்கு மேலே நீங்கள் இருக்கிறீர்கள். வாக்குத்தத்தங்கள் உங்கள் வாழ்க்கையிலே நிறைவேறட்டும். வேதத்தை வாசித்துப் பார்க்கும்போது தேவன் இடைப்பட்ட யாராவது சாதாரணமாக இருந்திருக்கிறார்களா? ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தானியேல், மொர்தகாய் இவர்கள் எல்லாரும் உங்களுடைய முன்னோர்கள். அவர்களுடைய மரபணுக்கள்தான் இப்போது உங்களுக்குள் இருக்கிறது.

**அறிக்கை:**

தேவன் வல்லமையான காரியங்களை என்னிடம் செய்யாவிட்டால் வேறே யாரிடம் அவர் செய்வார்?

ஏற்கனவே இந்த தேசத்திலே நாம் குறைவாக இருக்கிறோம். தேவன் நம்மைத்தான் உபயோகிக்கிறார். சரீரப்பிரகாரமாக நாம் குறைவானவர்கள். ஆனால் நாம் தேவஆவியைப் பெற்றிருக்கிறோம். ஒளியின் ஆவி, அக்கினியின் ஆவி, எல்லா அதிகாரங்களையும் வெல்லுகிற ஆவி தேவன் அதை எனக்குச் செய்யாவிட்டால் வேறே யாருக்குச் செய்வார்? நான் தேவனால் நேசிக்கப் பட்டும் விடுதலையாக்கப்பட்டும் இருக்கிறேன்.

**அறிக்கை:**

இயேசு என்னை நேசிக்கிறார். தேவன் என்மேல் மிகவும் அன்பானவர்.

ஆவிக்குரிய உலகம் எப்படி இயங்குகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாம் ஜெபத்திலே அதிக நேரம் செலவிடும் போது கர்த்தர் நம் மனக்கண்களைத் திறப்பார். சத்தியத்தை அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்று இயேசு சொன்னார். சத்தியத்தை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் யாரென்று நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

உங்கள் அழைப்பை நீங்கள் தெரிந்து கொண்டு உங்கள் அழைப்பிலே நீங்கள் வாழும் போது அது வெளிப்படும். ஒரு மனது தன்னைத் தான் திருப்தி படுத்தினால் அது பலவீனமாகி போய்விடும். ஒரு திருப்தியான மனது அது பாதாளத்தில்தான் இருக்க வேண்டும். வாஞ்சை உங்கள் ஆவிக்குரிய பகுதியாயிருக்கிறது. ஆவிக்குரிய அதிகாரத்தை நீங்கள் வாஞ்சியுங்கள். அதிகாரம் எடுத்து முழங்காலில் நின்று ஜெபியுங்கள். இயேசுவின் ஆவி எனக்குள்ளே இருக்கும் போது, இயேசுவின் ஞானத்தைவிட வல்லமையான ஞானம் உலகில் இல்லை. நான் தேவனால் நேசிக்கப்பட்டவர்.

உங்களுக்குள் இயேசுவின் ஆவி இருக்கிறார். நீங்கள் அதிகாரத்தோடு போக வேண்டும். நீங்கள் ஒரு சிங்கம். ஏனென்றால் யூத ராஜ சிங்கம் உங்களுக்குள் இருக்கிறார். இனி நீங்கள் அல்ல கிறிஸ்து உங்களுக்குள்ளே. அவரே கர்ஜிக்கிறார். இயேசுவைப் போல கெம்பீரமாக நடங்கள். இன்றிலிருந்து நீங்கள் நடக்கத் துவங்குங்கள். ஒருவேளை இப்போது உங்களுக்கு அது கஷ்டமாகத் தோன்றலாம் ஆனால், ஒரு நாள் நீங்கள் சிங்கமாக மாறுவீர்கள்.

உங்களுக்குள் இருக்கும் இயேசு இயங்குவதற்கு விட்டுக் கொடுங்கள். நீங்கள் மறுபடி பிறந்திருக்கிறீர்கள், சிங்கமாக பிறந்திருக்கிறீர்கள். பவுல் சொல்கிறார். இனி நான் அல்ல எனக்குள்ளே இயேசு வாழ்கிறார். இயேசு உங்களுக்குள் இருக்கிறார். அந்த வல்லமை உங்களுக்குள் இருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் இஸ்ரவேலின் தேவனை மட்டுப்படுத்தினார்கள். இன்றைக்கு சபையும் நாம் என்னவாயிருக்கிறோமோ

அதைத்தான் நம்புகிறோம். இந்த நாள் கர்த்தர் உண்டு பண்ணின நாள் இதிலே நீங்கள் மகிழுங்கள்.

**நீதிமொழிகள் 22:29.** உங்கள் வேலையிலே நீங்கள் ஜாக்கிரதையாக இருங்கள். தொடர்ந்து பயிற்சி எடுப்பதால் திறமையாக மாற முடியும். நீங்கள் மேலே போகும் போது, அங்கே கழுகுகள் இருக்கும். சவால்கள் அதிகமிருக்கும். நீங்கள் ஒரு சிங்கம் என்று நிரூபித்தால் தான் அங்கே இருக்க முடியும். நமக்கு பின் வாங்குதல் இல்லை. நாம் முன்னால் தான் போவோம். ராஜாக்கள் வருவார்கள். தேசங்கள் உன்னை அழைக்கும்.

ராகாபைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? இஸ்ரவேலின் தேவன் வித்தியாசமானவர் என்று அவளுக்குத் தெரிந்து இருந்தது. இஸ்ரவேலின் தேவனோடு உடன்படிக்கை பண்ணும்படி அவளுடைய தரிசனம் இருந்தது. அப்பட்டணத்திலே மிகவும் மோசமான இடத்திலே அவர்கள் வீடு இருந்தது. தேவனுடைய சித்தம் அந்த மதில் இடிந்து விழ வேண்டும் என்பது. முழு மதிலும் இடிந்தது. ராகாபின் வீட்டை மட்டும் தேவன் இரட்சித்தார். காரியங்கள் மாறும் என்பதை நீங்கள் விசுவாசியுங்கள். இப்போது நீங்கள் ஆயிரத்தில் ஒருவனாக சாதாரணமாக இருக்கலாம். ஆனால் சிங்கம் போல எழும்புங்கள் சிங்கம் எப்போதும் பின்னால் போகாது.

உங்களை வெளியே விரட்ட நினைப்பவர்கள் அவர்கள் முறிந்து போவார்கள். நீங்கள் தேவனுடைய பிள்ளை. "உன்னைத் தொடுகிறவன் என் கண்மணியைத் தொடுகிறான", என்று ஆண்டவர் சொல்கிறார். நீங்கள் பெரிய காரியங்களை எதிர் பாருங்கள். கோலியாத்தை நீங்கள் கொல்லும் வரை யாருமே உங்களுக்கு கை தட்ட மாட்டார்கள். நீங்கள் சீக்கிரத்திலே சிங்கத்தை கொல்லுவீர்கள். இன்றைக்கு நீங்கள் துவங்கியிருக்கிறீர்கள். கரடியைக் கொல்லுவீர்கள். சிங்கத்தைக் கொல்லுவீர்கள். அதன் பிறகு நீங்கள் கோலியாத்தைக் கொல்லுவீர்கள். கர்த்தர் கோலியாத்தை தாவீதிடம் கொடுத்தார். மோசேயிடம் பார்வோனைக் கொடுத்தார், "நான் பார்வோனுடைய இருதயத்தைக் கடினப் படுத்துவேன். அதன்பிறகு நீ அவனை மேற்கொள்வாய் அப்போது நான் உன்னோடு இருக்கிறேன் என்று அவர்கள் அறிந்து கொள்வார்கள்", என்று கர்த்தர் சொன்னார். நீங்கள்

ஆயத்தமாக இருக்கும் போது உங்களுக்குரியதைப் பெற்றுக்கொள்வீர்கள். நீங்கள் கோலியாத்தை வெல்லுவீர்கள்.

We are now on Facebook, Instagram, Twitter and Youtube

Kindly follow us.

**https://www.youtube.com/eternallightAGchurch**

**https://www.instagram.com/elagchurch**

**https://www.twitter.com/ELAGchurch**

**https://www.facebook.com/ELAGChurch/**

We welcome your valuable feedback to **elagliterature@gmail.com.**

**போதகரை பற்றி**



Ps. ஆஸ்வின் ஜேம்ஸ்டட் அவர்கள் ELAG சபையின் தலைமை போதகர்.

இவர் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டு, தன் செய்திகளின் மூலம் பல ஆத்துமாக்களை உயிர்ப்பிக்கும் வல்லமையுள்ள தேவ மனிதர். இவர் தம் கல்லூரி காலங்களில் இருந்து பகுதி நேர ஊழியம் செய்து வந்தார்.

இறையியல் பட்டதாரியான இவர், 1999 முதல் முழுநேர ஊழியம் செய்து வருகிறார். தேவ ஆவியானவரின் அபிஷேகம் நிறைந்த இவருடைய வார்த்தைகள் பலர் வாழ்வில் எழுப்புதலையும், வாழ்வாதாரத்தை உயிர்ப்பித்தும் உள்ளது. தேவ ஆவியானவரின் அபிஷேகம் நிறைந்த இவருடைய கூட்டங்களில், மக்கள் தொடப்பட்டு, தெய்வீக சுகமும், விடுதலையும் பெற்றுள்ளனர்.

இவருடைய ஊழியப் பாதையில் உணர்ச்சி பூர்வமான விடுதலை, சரீரப் பூர்வமான விடுதலை, பிசாசின் கட்டுகளிலிருந்து விடுதலை மற்றும் பில்லி சூனிய கட்டுகளிலிருந்து விடுதலை போன்ற பல்வேறு நிலைகளில் கர்த்தர் இவரை வல்லமையாகப் பயன்படுத்தி வருகிறார். மக்களின் வாழ்வை மாற்றி, அவர்களை முழு விடுதலைக்குள்ளாக நடத்தி, கிறிஸ்துவுக்குள் தங்களுடைய அதிகாரத்தை உணர வைப்பது இவருடைய ஊழியத்தின் நோக்கம.

கர்த்தர் இவரை இளைஞர்கள் மற்றும் குடும்பங்களின் மத்தியில் பயன்படுத்தி, அவர்கள் தேவனில் அடுத்த நிலைக்குள்ளாக கடந்து செல்லவும், தேவனுடைய பிள்ளைகளுக்குண்டான அதிகாரத்தை தங்கள் வாழ்வில் பயன்படுத்தவும் வழிநடத்துகிறார். தேவ ராஜ்ஜியத்தின் மேல் உள்ள இவருடைய பேரார்வம் இவரது செய்திகளில் வெளிப்பட்டு அதை கேட்கும் மக்களின் இருதயங்களில் கர்த்தரின் மேலான பேரார்வத்தைத் தூண்டுகிறது.

**சபையைப் பற்றி**

ELAG சபை 4 பேருடன் 2013ல் எளிமையாக ஆரம்பிக்கப்பட்டது. விசுவாசத்துடன் சிறுகூட்டமாகத் துவங்கினோம். ஆவிக்குரிய அதிகாரத்திலும் வல்லமையிலும் நடக்கிற தேவ பிள்ளைகளை உருவாக்கி உலகமெங்கிலும் சுவிஷேசத்தை அறிவித்து, தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்டுவதே நம்முடைய நோக்கம்.


Eternal Light AG Church
Opp. to St.Xavier's School,
2nd Cross,
Bettadasanapura Road,
Electronic City Phase I,
Bengaluru-560100,
Karnataka, India

Sunday Service:
English Service : 09:00 AM - 11:00 AM
Tamil Service : 11:30 AM - 01:30 PM

Mob : 6364066791 / 6364066792
E-mail : ecitycf@gmail.com
Website : www.elagchurch.com